2019 ஜூலை 19]

சொன்னதுபோல, கொய்யா நாளொன்றுக்கு 32 டன்னிலிருந்து 40 டன் அளவிற்குத் தேவைப்படுகிறது. அந்த அளவிற்கு கொய்யா உற்பத்தி செய்யப்பட்டால்தான், கொய்யா பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்கப்படும். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பண்ருட்டி தொகுதியில் மரவள்ளிக்கிழங்கு தொழிற்சாலை ஒன்றினை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அதனை மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, தேவையிருப்பின் அது ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 149, மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

149—

வீட்டுமனைப் பட்டா

***26797—திரு. உ. மதிவாணன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ்வேளூர் தொகுதி, நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றியம், அகலகண் ஊராட்சி, மேல்பாதி கிராமத்தில் விடுபட்ட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் வட்டம், அகலகண் கிராமம், மேல்பாதி தெருவில் 93 குடும்பங்கள் வசித்து வருகின்றன. அருள்மிகு கைலாசநாதர் கோயில் மற்றும் அருள்மிகு நேத்திரபுரீஸ்வரர் கோயில் இடங்களில் ஆக்கிரமிப்புமூலம் குடியிருந்து வரும் 21 நபர்களுக்கு வரன்முறை செய்து, வீட்டுமனைப் பட்டா வழங்குவது தொடர்பாக, இந்து சமய அறநிலையத் துறைக்கு நிலமதிப்பு

செலுத்தியோ அல்லது அதற்குப் பதிலாக தகுதியான மாற்று அரசு நிலங்களைத் தேர்வு செய்தோ, இந்து சமய அறநிலையத் துறைக்கு வழங்கி கோயில் நிலங்களில் குடியிருப்பவர்களுக்குப் பட்டா வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நத்தம் என்னும் வகைபாடுடைய இடத்தில் குடியிருந்து வரும் 63 நபர்களுக்கு ஏற்கெனவே பட்டா வழங்கப்பட்டுள்ளது. தனியார் Trust-க்குச் சொந்தமான பட்டா இடங்களிலே அவர்கள் குடியிருந்து வருகிற காரணத்தினாலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற அந்த 9 நபர்களுக்குப் பட்டா வழங்கிட இயலாத நிலை இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.

திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதன் முதலாக ஆதி திராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கி, அவர்களுக்கு சமூக ரீதியிலான ஓர் அந்தஸ்தை வழங்கிய தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். எங்கள் கழகத்தினுடைய தலைவர் அண்ணன் தளபதியார் அவர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்கள் இயக்கத்தினுடைய இளந்தலைவர், இளைஞரணி செயலாளர் மரியாதைக்குரிய சகோதரர் உதயநிதி அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய கீழ்வேளூர் சட்டப் பேரவைத் தொகுதியில், நாகப்பட்டினம் ஒன்றியத்திலுள்ள அகலகண் ஊராட்சியில் மேல்பாதி கிராமத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது. . .

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன், நீங்கள் பேசுங்கள்.

திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோயில் நிலங்களில் பட்டா வழங்குவதற்கு

2019 ஜூலை 19]

ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதேநேரத்தில் ஆதி திராவிடர் மக்கள் மட்டுமல்லாமல், பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த 15 நபர்களுக்கும் இதுவரை பட்டா வழங்கப்படவில்லை. அவர்கள் அங்கே 50 ஆண்டு காலமாகக் குடியிருந்து வருகின்றார்கள். அதேபோல் குறவர் சமூகத்தைச் சேர்ந்த பாண்டியன், முருகேசன், திருமுருகன், காளிதாஸ் போன்றவர்களுக்கும் இதுவரை பட்டா வழங்கப்படாமல் இருந்து வருகின்றது. இவர்களுக்கும் பட்டா வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகின்றேன். மேலும், தனியாருக்குச் சொந்தமான இடங்களில் குடியிருப்பவர்களுக்கு அரசாங்கத்தின் மூலமாக வேறு இடங்களை விலைக்கு வாங்கி அவர்களுக்கு பட்டா கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டத்தில் அதிகமாக கோயில் நிலங்கள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாக அறிவார்கள். அந்தக் கோயில் நிலங்களை நாம் வருவாய்த் துறைக்குக் கேட்கின்றபோது நிலத்தின் மதிப்பைவிட மூன்று மடங்கு அதிகமாக அவர்கள் நிர்ணயிக்கின்றார்கள். இருந்தபோதிலும்கூட நாம் நில பரிவர்த்தனை அடிப்படையில் அவர்களுக்கு மாற்று இடம் கொடுக்கின்றோம்.*

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

நாகப்பட்டினம் மாவட்டத்தில் எங்கும் இடம் இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், நாம் முடிந்த அளவிற்கு ஏழை எளியவர்களுடைய வாழ்வில் ஒளியேற்றி வைக்கின்ற வகையில் இன்றைக்கு பட்டா வழங்கிக்கொண்டிருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட நரிக்குறவர்கள் மற்றும் ஏழைகளுக்கு அவர்கள் எந்த வகைப்பாடு நிலத்தில் குடியிருந்து வருகின்றார்கள் என்பதை ஆய்ந்தறிந்து பட்டா வழங்கப்படும். அவர்கள் நத்தம் இடத்தில் குடியிருக்கின்றார்கள் என்றால் அதனை வரன்முறை செய்வதில் எந்தத் தடையும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையினை ஏற்று

இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் அவர்கள் தனியார் நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள் என்கிறபோது அதற்கு அரசு சார்பாக பட்டா வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை நீங்கள் வைத்திருக்கின்றீர்கள். பொதுவாக அரசு நிலங்களில் குடியிருப்பின் மூலமாக ஆக்கிரமிப்பு செய்பவர்களுக்குத்தான் அரசு பொறுப்பேற்று அவர்களுக்கு பட்டா வழங்குகிறது. நீங்கள் குறிப்பிட்ட தனியாரான Akash Trust முன்வருமேயானால், மாவட்ட நிருவாகத்தின் மூலமாக அறிவுரை வழங்கி, ஏழை எளியவர்களுக்கு பட்டா கொடுக்கப்படும். தனியார் முன்வந்தால் அரசு உரிய அறிவுரைகளை மாவட்ட நிருவாகத்திற்கு வழங்கலாம் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.

திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் ஒன்றியம், வடவூர் ஊராட்சி, சூரியக்காரன் தோப்பு என்ற இடத்தில் 20 குடும்பங்களும், ஒரத்தூர் ஊராட்சியில் வாணியன்கொள்ளை தெருவில் 30 குடும்பங்களும், மகாதானபுரம் ஊராட்சியில் மாணிக்கப்பங்கு என்ற கிராமத்தில் 5 குடும்பங்களும், அதேபோன்று, கீழ்வேளூர் ஒன்றியத்தில் ஆறுகள் தூர் வாரப்பட்ட காரணத்தினால் அந்த ஆற்றங்கரையில் குடியிருக்கக்கூடிய மக்களுக்கும் அரசாங்கத்தின் மூலமாக வேறு இடத்தை ஆர்ஜிதம் செய்து பட்டா கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்ற அந்த 20 பேர், 30 பேரைப் பொறுத்தவரையில், அவை எல்லாமே நான் அறிந்த வகையில் வரன்முறைப்படுத்தி கொடுக்கக்கூடிய இடங்கள்தான். குடியிருப்பின் மூலமாக அவர்கள் ஆக்கிரமிப்பு செய்திருப்பதாகத் தெரிகின்றது. அவ்வாறு இருப்பவர்களுக்குத்தான் வரன்முறைப்படுத்துவதற்கு நாம் ஏற்கெனவே இந்த மன்றத்தில்

விவாதித்து இருக்கின்றோம். அதற்கான கருத்துருவினை மிக விரைவில் பெற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான கவனத்திற்கு எடுத்துச் சென்று, அதனை வழங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ் அவர்கள்.

திரு. ஆர். கணேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம், உதகையில் MRC-Madras Race Club-க்குச் சொந்தமான 50 ஏக்கர் நிலத்தில், கிட்டத்தட்ட 4 ஏக்கர் நிலத்தில் ஒன்றே முக்கால் ஏக்கர் நிலத்தை சர்வே செய்து parking-க்காக வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் பட்டா வழங்குவதற்குத் தடை இருப்பதனால், நமது நிருபர்களுக்கு கோயம்புத்தூர் மாவட்டத்தில் பட்டா பெறுமாறு மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் கூறியிருந்தார்கள். கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கூறி அவர்களுக்கு பட்டா வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேற்றையதினமே கடிதம் மூலமாக ஒரு கோரிக்கையினை என்னிடம் அளித்திருக்கிறார்கள். நீலகிரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய பத்திரிகையாளர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா அல்லது அதற்குத் தகுந்த விலை நிர்ணயம் செய்தால் அதையும் கொடுத்து பெறுவதற்கு ஒரு கோரிக்கை கொடுத்திருக்கின்றார்கள். ஏற்கெனவே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் வைத்த கோரிக்கையின் அடிப்படையில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் இருக்கக்கூடிய பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

அதேபோன்று மதுரையில் இருக்கின்ற பத்திரிகையாளர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கின்றது.

முற்பகல் 11-05

சென்னையிலே இருக்கக்கூடிய பத்திரிகையாளர்களுக்குக்கூட வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நீலகிரி மாவட்டத்தில் வழங்குவதற்குத் தடையாணை இருக்கின்ற காரணத்தினால், அதை அவர்களுக்கு கோயம்புத்தூர் மாவட்டத்தில் வழங்க கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். மாவட்ட நிருவாகத்திற்கு உரிய அறிவுரைகள் வழங்கி, அதை பரிசீலனையில் எடுத்துக்கொண்டு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடத்திலே பட்டா வேண்டும், அதேபோல trust இடத்திலே பட்டா வேண்டும் என்று பல்வேறு கோரிக்கைகளை வைத்தார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் கஜா புயல் பாதிப்பின்போது வேதாரண்யம், நாகப்பட்டினம் பகுதிகளுக்கு வருகை தந்தபோது, மக்கள் 'நிவாரணம் தர வேண்டும்' என்று கேட்டதைவிட கோயில் நிலங்களிலே குடியிருப்பவர்களுக்குப் பட்டா வேண்டும் என்று கோரியதுதான் அதிகமாக இருந்தது. காரணம், என்னுடைய தொகுதியை எடுத்துக்கொண்டால், வேதாரண்யத்திலே, அந்தக் கோயிலுக்கு 26000 ஏக்கர் நிலம் சொந்தமாக இருக்கிறது. பட்டா நிலம் என்பது மிக மிகக் குறைவு. நகர்ப்புறத்திலேகூட குடியிருக்கிறவர்கள் கிட்டத்தட்ட 75 சதவிகிதம் பேர் கோயில் நிலத்திலேதான் குடியிருக்கிறார்கள். இங்கே கோயில் நிலங்களிலே குடியிருக்கிறவர்களைக் குடியிருக்கக் கூடாது என்று யாரும் சொல்லவில்லை; குடியிருக்கிறார்கள். என்ன ஒரு சிறிய பிரச்சினை என்றால், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் ஆகியோரிடத்திலே மக்கள் கேட்டுக்கொள்வது என்னவென்றால், அந்தக் குடியிருக்கிற

2019 ஜூலை 19]

இடங்களுக்கு மின் இணைப்பு கொடுப்பதிலே அறநிலையத் துறையினுடைய NOC கேட்கிறார்கள். அதைக் கொடுக்க மறுக்கிறார்கள். எனவே, மின்சார வசதி இல்லாமல் இருக்கிற அந்தக் கோயில் நிலத்திலே குடியிருக்கிறவர்களுக்கு மின் வசதி அளிக்க வேண்டும். அதற்கு அறநிலையத் துறை NOC தர வேண்டும். இல்லையென்றால், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் NOC பெறாமலேயே மின் இணைப்பு கொடுப்பதற்கு முன்வர வேண்டும், ஒன்று.

இரண்டாவது, பழுதுபட்ட தன்னுடைய கொட்டகை வீடுகளை, அவரவருடைய பொருளாதார வசதிக்கேற்ப மாற்று கொட்டகை கட்டிக்கொள்ள முன்வருபவர்களை அறநிலையத் துறையினர் தடுக்கிறார்கள். அதைத் தடுக்காமல் இருக்க வேண்டும். ஆக, கோயில் நிலத்தில் குடியிருக்கிறவர்கள் எந்த இடத்தில் குடியிருக்கிறார்களோ, அங்கேயே அவர்களுக்கு NOC கொடுத்தாலே போதும் என்பதுதான் அங்கே குடியிருப்பவர்களுடைய வேண்டுகோளாக இருக்கிறது என்பதை மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், சொல்லுங்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். நியாயமாக அமைச்சரவைக் கூட்டத்திலே இதுபற்றி விவாதித்து, இதற்கு ஒரு முடிவை கொண்டுவர வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 150, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

150—

பேருந்து வசதி

***3462—திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—